மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : வொர்க் ஷாப்களில் ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ரிப்பேர் செய்வதோடு, ஸ்பேர் பார்ட்ஸ் வேண்டுமென்றால், ஸ்பேர் பார்ட்ஸையும் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு அனுகூலமாக, ஆங்காங்கு ஸ்பேர் பார்ட்ஸும் வைப்பதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஸ்பேர் பார்ட்ஸ் தனியாக தலைநகரங்களில் வைப்பது மட்டுமல்ல, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான திட்டம் இப்போது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது. கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு டிராக்டர்களை ரிப்பேர் செய்து கொள்வதற்கு வசதிகள் அளிப்பதோடு மட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டிய போதிய ஸ்பேர் பார்ட்ஸ் களைக் கொடுப்பதற்கான ஏற்பாடு வெகு சீக்கிரம் செய்யப்படும்.

உழவர்களுக்கு ஊக்கமளித்தல்

* 880 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அதிக அளவில் உற்பத்தி செய்யும் உழவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கி, பட்டமும் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனை யிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கிராம, வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில் ஆண்டு தோறும் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு பயிர்கள் குறித்து நடக்கும் விளைச்சல்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் மாநில அரசால் வழங்கப்படுகின்றன. இவை தவிர ஆண்டுதோறும் மாநில அளவில் நடக்கும் போட்டிகளில் முதல் பரிசுகள் பெறுபவர்களுக்கு " வேளாண்மைச் செம்மல் " என்ற பட்டத்தை வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : இந்தப் பரிசுகள் வழங்கும்பொழுது ஒவ்வொரு பயிருக்கும், உதாரணமாக ஒரு ஏக்கரில் நெல் அதிக விளைச்சல் செய்கிறார்கள், ஒரு ஏக்கரில் கரும்பு அதிக டன் உற்பத்தி செய்கிறார்கள், ஒரு ஏக்கரில் வாழை அதிகமான அளவுக்கு விளைச்சல் செய்கிறார்கள, இப்படி ஒவ்வொரு தரத்திற்கும் ஒரு பரிசு தர, பட்டம் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மாநில அளவில் சோளம், கம்பு, கேழ்வரகு பயிர்கள் குறித்து நடக்கும் விளைச்சல் போட்டி

கள் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்றன. கொடுக்கப்படுகின்ற பரிசு களின் விவரங்கள் பின்வருமாறு :

கிராம அளவில்—ரூ. 10.

வட்டார அளவில்—முதல் பரிசு ரூ. 100.
இரண்டாம் பரிசு ரூ. 50.

மாவட்ட அளவில்—முதல் பரிசு ரூ. 300.
இரண்டாம் பரிசு ரூ. 200.

மாநில அளவில்—முதல் பரிசு ரூ. 2,000.
இரண்டாம் பரிசு ரூ. 1,000.
மூன்றும் பரிசு ரூ. 500.

இந்தப்பரிசுகள் தவிர, பரிசு பெற்றவர்களுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கப் படுகின்றன. மேற்குறிப்பிட்ட போட்டிகளுக்கு மேலாக, உழவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக அனைத்திந்தியப் பயிர் விளைச்சல் போட்டி ஒன்றும் உள்ளது. இது மத்திய அரசால் நடத்தப் பெறுகிறது.

ஒவ்வொரு பயிர் குறித்தும் அனைத்திந்திய அளவில் மூன்று பரிசுகள் கீழே கண்டவாறு வழங்கப்படுகின்றன:

முதல் பரிசு—ரூ. 3,000.

இரண்டாம் பரிசு—ரூ. 1,200.

மூன்றும் பரிசு—ரூ. 800.

இப்படிப்பட்ட ஊக்கங்கள் தரப்படுகின்றன. தனியாகக் கரும்புக்கு இருக் கிறதா என்ற விவரம் இல்லை. இல்லையென்றால், அதற்கும் இப்படிப்பட்ட திட்டத்தைச் செய்ய முயற்சிக்கிறோம்.

Artificial rain

*881 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the success, if any, achieved so far in the field of artificial rain making experiments conducted in the State ?

மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி : 1955–1967 ஆண்டுகளில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகளிலிருந்து, செய்முறையின் வெற்றியை உறுதியாக கூறக் முடியாவிட்டாலும் மேகத்தைத் தூண்ட கால்சியம் குளோரைடு மற்றும் சோடியம் குளோரைடு சேர்ந்த கலவையை உயர் உஷ்ண நிலையில் ஆவியாக மாற்ற ஒரு ஆவியாக மாற்றும் கருவிக்குப் (Vaporizer) பதிலாக, பல ஆவியாக மாற்றும் கருவிகளைப் பயன் படுத்தினால், செய்முறையின் வெற்றிக்கு வாய்ப்புக் கூறுகள் அதிகமாகும். அதிகச் செலவின் காரணமாக இப்பரிசோதனைகள் தொடர்ந்து நடத்தப்பட வில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, தற்போது நாம் தீவிர பசுமைப் புரட்சித்திட்டத்தின் அடிப்படையில் பூமிக்கு அடியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து விளைச்சலை அதிகப்படுத்துகிற திட்டத்தில் ஈடு